இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்பு திட்டம் 2006
தொடர் மதிப்பீட்டு பரீட்சை 2 மட்டம் 6
LWU 3326/4326 – தீங்கியல் சட்டம்
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 10.11.2006 நேரம்: பி.ப 3.00 - பி.ப 3.40

ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

1. பின்வரும் விடயங்களை ஆராய்க.

(அ) மலித் கணிணி ஒன்றை கொள்வனவு செய்யத் தீர்மானித்தான். மலித்திற்கு கணிணிகளைப் பற்றி போதிய அறிவு இல்லாத காரணத்தால் கணிணி நிறுவனம் ஒன்றில் தரவு ஒழுங்கு படுத்தும் முகாமையாளராக(Data processing Manager) தொழில் புரியும் நிக்கில் இடம் விசாரித்தான். NMB கணிணி ஒன்றை கெள்வனவு செய்யுமாறு நிக்கில் மலித்துக்கு ஆலோசனை வழங்கினான். நிக்கிலுடைய சிபார்சுடன் மலித் NMB கணிணியை அதனுடைய அணைத்து பாகங்களுடன் கொள்வனவு செய்தான்.

கணிணியை இணைத்த பின்பு அது முறையாக தொழிற்பட வில்லை. எனவே கணிணித்துறை நிபுணரான அசித்தவிடம் ஆலோசனை பெற அவனை மலித் அழைத்தான். அசித்த, குறித்த கணிணியின் CPU மிகவும் பழையது எனவும் பல்வேறு முறை திருத்தப்பட்டுள்ளது எனவும் அறிவித்தான். மேலும் கணிணியுடைய ஆயட்காலம் முடிவு அடைந்து விட்டது எனவும் கூறினான். அதன் பின்பு நிக்கில் தரவு ஒழுங்குபடுத்தும் முகாமையாளர் அல்ல எனவும் அவன் குறிப்பிட்ட கணிணி நிறுவனத்தின் விற்பனை பிரதி நிதி எனவும் மலித் அறிந்து கொண்டான்.

மலித் நிக்கிலுக்கு எதிராக நட்டஈடு கோரி வழக்கிட முடியுமா? தீர்ப்புச்சட்டங்களுடன் ஆராய்க.

(ஆ) கேஷானி அழகுசாதனப் பொருள் கடை ஒன்றை கொண்டிருந்தாள். கிரமமுறையான வாடிக்கையாளர்களுள் ஒருவரான நயோமி தன்னுடைய திருமணத்திற்காக பெருந்தொகையான அழகு சாதனப்பொருட்களை கேஷானியிடம் வாங்கினாள். நயோமி திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் ஒரு கிறீமை பூசினாள். அதனை அடுத்து அவளுக்கு முகத்திலே அழற்சி ஏற்பட்டது. சில நிமிடங்களின் பின்பு அவளுடைய முகம் முழுவதும் சிவப்பு புள்ளிகள் ஏற்பட்டன. உற்பத்தியாளர்கள் முகத்திற்கான கிறீமை தயாரிப்பதற்கு வழமையாக பயன்படுத்துவதை விட கூடிய வீதத்தில் இரசாயனப் பொருட்களை பயன்படுத்தினர் என்பது பின்பு கண்டு பிடிக்கப்பட்டது. இந்த கிறீமை முன்பே பரீட்சித்து இருந்தால் அதில் காணப்பட்ட குறைபாட்டை கண்டு பிடித்து இருக்கலாம்.

நயோமிக்கு ஆலோசனை வழங்குக.

2. "இசைந்தது தீங்காகாது என்ற பாதுகாப்பு அதற்கு வழங்கப்பட்ட குறைந்த அளவு பெறுமதி காரணமாக கவனையீனம் தொடர்பான வழக்கு நடவடிக்கைகளில் வரையறுக்கப்பட்ட எல்லையை கொண்டுள்ளது".

இவ் விடயம் தொடர்பாக அண்மைக்கால தீர்ப்புச் சட்டங்களுடன் இக்கூற்றை ஆராய்க.

(பதிப்புரிமை பெற்றது)